DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.330/2023

**prosecution witness: LW-12 as PW-8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கனிராஜ் | தொழில் | : சார்பு ஆய்வாளர் ஓய்வு |
| த/பெ. | : கோவிந்தன் | வயது | : 62 |
| ஊர் | : இராமநாதபுரம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>14.10.2025</u>

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெறறு தற்போது இராமநாதபுரம் வசித்து வருகிறேன். நான் கடந்த 03.06.2023ம் தேதி மண்டபம் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது மண்டபம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேலு அவர்கள் மண்டப காவல் நிலைய குற்ற எண் 90/2023 சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து புலன்விசாணைக்கு வைத்தார். நான் மேற்படி வழக்கை பார்வையிட்டு எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று 03.06.2023ம் தேதி 20.00 மணிக்கு சாட்சிகள் பூபதி, பாஸ்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. சாட்சிகள் பூபதி, பாஸ்கர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் காயம்பட்ட சந்திரசேகரன், பழனிச்சாமி, இராஜசேகர், லதா ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.06.2023ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட சந்திரசேகரன் சிகிச்சை பலனளிக்காமல் 15.00 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த இன்டிமேசனை பெற்று வழக்கின் சட்டப்பிரிவு 279, 304ஏ இதசவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து வழக்கு விசாரணையை ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. மேற்சொன்ன 4 சாட்சிகளை தவிர வேறு சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில்இறந்த நபர் உயிருடன் இருக்கும்போது மதுரை அரசு மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்றது யார் என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேலு ஆவார். அந்த முதல் தகவல் அறிக்கையை நான் பார்த்தேனா என்றால் ஆம். அதில் இராமேஸ்வரம்–மதுரை ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி லாரியை முந்தி செல்வதற்காக வலதுபக்கம் சென்றபோது நான் சென்ற வண்டியை ஓட்டிய பாம்பனை சேர்ந்த பிரசாத் என்பவர் மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று தானாக வண்டியில் இருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக சந்திரசேகரன் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

4. சந்திரசேகரனை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். என்னுடைய விசாரணையில் விபத்து எப்படி நடந்தது என்பதை வேலுவிடம் சொன்னதைத்தான் என்னிடம் சொன்னார். இந்த வழக்கு சம்பந்தமாக நேரடியாக பார்த்த சாட்சியை நான் விசாரிக்கவில்லை. எனக்கு பின்பு வழக்குகோப்பை ஆய்வாளர் ஜீவரெத்தினம் எடுத்துக்கொண்டு என்னை விசாரித்தார். வேறு எந்த எந்த சாட்சிகளை அவர் விசாரித்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது. பிரிவு மாறுதல் அறிக்கையை எப்போது தயார் செய்தீர்கள் என்றால் 04.06.2023 ம் தேதி தயார் செய்தேன்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.10.14 14:57:24 +0530